සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

# වර්ෂ අවසාන ඇගයීම
# ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
# Year End Evaluation

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade 11 | විෂයය / பாடம் / Subject: விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper 11 | කාලය / காலம் / Time: மணி1 |

**முதலாம் வினாவையும் ஏனைய வினாக்களுள் எவையேனும் நான்கு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

01) அதிகரிக்கும் மக்கள் தொகை காரணமாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வாக, இலங்கையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அதற்கமைய தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மக்களிடையே வீட்டுத்தோட்டச் செய்கையை பிரபல்யபடுத்தும் நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1) வீட்டுத் தோட்டச் செய்கையினை மேற்கொள்வதனால் குடும்ப அலகிற்கு கிடைக்கக்கூடிய பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

11) பயிர்செய்வதற்கு முன்னர் மண்ணைச் சோதிப்பதன் மூலம் இனங் காணக்கூடிய மண்ணின் பௌதிக இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

111) விவசாயி ஒருவர் தனது பண்ணையில் சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு பின்வரும் பயிர்களைத் தெரிவுசெய்தார். அந்தப் பயிர்கள் அடங்கும் தாவரக் குடும்பத்தைக் குறிப்பிடுக.

1. சோளம் 2. பயிற்றை 3. பாகல் 4. வத்தாளை

IV) சுழற்சிமுறைப் பயிர்ச் செய்கையின் அனுகூலங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

V) பாகற் செய்கையின் போது பொதுவாக காய்களில் சேதத்தை ஏற்படுத்தும் பீடையைப் பெயரிட்டு, அந்தப் பூச்சியைக் கட்டுப்படுத்தும் சூழல் நேய பீடைகட்டுப்படு முறையைப் பெயரிடுக.

VI) சோளப் பயிர் செய்கையில் இடைப்பண்படுத்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தக்கூடிய விவசாய உபகரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

VII) இந்தப் பண்ணையில் கூட்டெருத் தயாரிப்பதற்கு இடக்கூடிய மூலப்பொருட்கள் நான்கினைக் குறிப்பிடுக.

VIII) அறுவடை செய்யப்பட்ட பாகற்காயை சந்தைக்குக் கொண்டுசெல்லும் போது ஏற்படக் கூடிய அறுவடைக்குப் பிந்திய இழப்பைக் குறைத்துக்கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிடுக.

IX) பொன்னாங்காணிகீரைச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயி, தனது உற்பத்தியை சந்தைப் படுத்தும்போது அதிக விலையைப் பெற்றுக்கொள்வதற்கு கடைப்பிடிக்க வேண்டிய செயற்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

X) இலங்கையில் விவசாய அபிவிருத்திக்காக, அரசினால் விவசாயிகள் ஊக்குவிக்கப்படும் வழிவகை இரண்டைக் குறிப்பிடுக.

(2×20= 40 புள்ளிகள்)

2) காலநிலைக் காரணிகளையும் மண் காரணிகளையும் ஒழுங்காக முகாமை செய்வதனூடாக சிறப்பான பயிர் வளர்ச்சியையும் உயர் விளைச்சலையும் பெற்றுக் கொள்ளலாம்.

a) இலங்கையின் பிரதான காலநிலை வலயங்கள் மூன்றைப் பெயரிடுக.

b) விவசாய சூழலியல் வலயங்கள் வகைப்படுத்தல், பயிர்செய்கையின் போது முக்கியமாக அமையும் விதங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

ii) a) பாறைகள் வானிலையாவழிதலில் செல்வாக்கு செலுத்தும் பௌதிகக் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.

b) பயிர்செய்கையின் போது தாவரத்தை பயன்படுத்தும் விதத்திற்கமைய மண்ணரிப்பைக் குறைத்துக் கொள்ளலாம். அவ்வாறான வழிமுறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

iii) a) பயிர்களின் வளர்ச்சிக்கு மண்ணில் காணப்பட வேண்டிய சிறப்பான ஈரலிப்பு மட்டத்தைப் பெயரிடுக.

b) மேட்டுநிலப் பயிர்கள் பயிர் செய் நிலத்தில் இறுக்கமடைந்த மண்ணில் காற்றூட்டலை விருத்தி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

3)மழைவீழ்ச்சி போதுமான அளவில் கிடைக்காத போது நீர் பாசனமும் மேலதிக நீர் களத்தில் காணப்படும்போது நீர் வடிப்பும் பயிர்ச்செய்கையின் போது மிக முக்கியமானதாகும்.

i. a) பயிர்ச் செய்கைக்கு நீர் முக்கியமாக அமையும் விதங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

b) மேற்பரப்பு நீர்ப்பாசன முறைகள் இரண்டைப் பெயரிடுக.

(03 புள்ளிகள்)

ii. a) மேட்டுநிலப் பயிர்செய் நிலத்தில் சிறந்த நீர் வடிப்பைப் பேணுவதன் மூலம் ஏற்படும் அனுகூலங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

b) தரைக்கீழ் நீர் வடிப்பு முறையைப் பெயரிடுக.

(03 புள்ளிகள்)

iii. a) பயிர்களுக்கு மேற்கொள்ளப்படும் பாசன நீருடன், நீரில் கரையக்கூடிய பசளையை இடக்கூடிய நீர்ப்பாசன முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

b) மண்ணுக்கு இடப்படும் பசளையை பயிர்கள் பெற்றுக்கொள்ளும் தன்மையை அதிகரிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிவகைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

4) தற்போது செயற்படுத்தப்படும் தரிசு வயல்களை விளைச்சல் நிலங்களாக மாற்றுவோம் எனும் வேலைத்திட்டத்தினால், இலங்கையில் நெல் உற்பத்தியும் பயிரிடும் நிலத்தின் அளவும் அதிகரித்துக்கும்.

i) a) இலங்கையில் நெற்செய்கை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் பற்றிய இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.

b) இலங்கையில் பயிரிடப்படும் திருந்திய நெற்பேதத்தின் நல்லியல்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

ii) a) நெற்செய்கையில் சேதத்தை ஏற்படுத்தும் பூச்சியில்லாத விலங்குகள் இரண்டைப் பெயரிட்டு, அவற்றின் சேதத்தைக் குறிப்பிடுக.

b) நெற்ச்செய்கையில் மேற்கொள்ளப்படும் வயலில் காணப்படக்கூடிய பின்வரும் களைகளின் வகைகளுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

- கோரை
- அகன்ற இலைக்களை

(03 புள்ளிகள்)

iii) நெல் வித்துக்களை வயிலில் தாபித்து பின்னர் மேற்கொள்ளப்படும் பின்கண்காணிப்பு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

05) விவசாயத்தின் விருத்தியுடன் பயிர்ச்செய்கைக்குத் தேவையான பல்வேறு விதமான நடுகைப் பொருட்கனைப் பெற்றுக்கொள்வதற்கு இலிங்கமுறை இனப்பெருக்கலுக்கு மேலதிகமாக பதியமுறை இனப்பெருக்கலும் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படுகின்றது.

i. a.) வித்து முளைத்தலுக்கு அவசியமான காரணிகள் இரண்டைப் பெயரிடுக.

b) வித்துக்களை நாட்டுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் வித்துச் சிகிச்சை முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

ii. a) மாஞ்செடியில் அரும்பு ஒட்டுதலின் போது ஒட்டுக்கட்டை மற்றும் ஒட்டுமுளையினை தெரிவு செய்வதற்கு பொருத்தமான மா பேதங்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

iii. இழைய வளர்ப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் தாவர இனப்பெருக்கலின் அனுகூலங்கள் நான்கு தருக.

(04 புள்ளிகள்)

6) மனித போசணையில் மனிதனின் உடல், உள நிலவுகையை உறுதிப்படுத்துவதற்கு உணவைத் தெரிவுசெய்தல் மற்றும் தயாரித்தல் ஆகியவற்றுக்கு போசணை பற்றிய அறிவு மிக முக்கியமாகும்.

i. a.) புரதத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய தாவர மற்றும் விலங்குணவு ஒவ்வொன்று எழுதுக.

b) புரதம் அடங்கிய உணவுகளை பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

ii. a) பின்வரும் உணவுகள் பழுதடையும் போது அவதானிக்கக் கூடிய இயல்பு ஒவ்வொன்று எழுதுக.

a. பால் b. இறைச்சி c. மீன் d. முட்டை

b) இலங்கை மக்களிடையே குருதிச்சோகை நோய் நிலைமை அதிகளவில் காணப்படுவதற்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

iii. a) மேலதிக மாம்பழ விளைச்சலை நற்காப்புச் செய்யக்கூடிய முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

b) உணவொன்றை சந்தைப்படுத்தும் போது அவ் உணவின் “பெறுமானத்தை அதிகரித்தல்“ மூலம் ஏற்படும் அனுகூலங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

07) இலங்கையில் தற்போது விலங்கு உற்பத்தி மற்றும் தலாநபர் விலங்குப் புரத நுகர்வு அதிகரிப்பின் மூலம் விலங்கு வளர்ப்பு துறை படிப்படியாக அபிவிருத்தியடைந்து வருவதனை காட்டுகின்றது.

i.a)இலங்கையில் பாலுற்பத்திக்காக வளர்க்கப்படும் ஐரோப்பிய கறவை இனங்கள் இரண்டைப் பெயரிடுக.

b) இந்திய மாட்டு. வர்க்கங்களின் விசேட இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

ii. a) விலங்குணவுக் கலவையைத் தயாரிக்கும் போது பின்வரும் போசணைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விலங்குணவு ஒவ்வொன்றைப் பெயரிடுக.

காபோதரைற்று

கனிப்பொருள்

b) பசுமாடுகளை செயற்கை முறையில் சினைப்படுத்துவதனால் ஏற்படும் அனுகூலங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

iii. இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியை கொண்ட பகுதியாக நகரமயமாக்கலுக்கு உட்பட்ட பிரதேசத்தில் கோழிவளர்ப்பதற்கு மிகப் பொருத்தமான முறையைப் பெயரிட்டு, அந்த முறையின் அனுகூலங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)